கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 18-09-2023**

புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-09-18 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)

| வானிலை காரணி | 2023-09-19 | 2023-09-20 | 2023-09-21 | 2023-09-22 | 2023-09-23 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 23 | 7 | 17 | 19 | 16 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.7 | 36.6 | 36.6 | 36.5 | 35.7 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.3 | 24.7 | 24.7 | 25.1 | 24.4 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 72 | 73 | 76 | 76 | 79 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 48 | 45 | 46 | 44 | 49 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 16 | 13 | 13 | 14 | 15 |
| காற்றின் திசை (கோணம்) | 202 | 180 | 244 | 191 | 191 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

செப்டம்பர் மூன்றாம் வாரத்தில் இலேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 34.0 °C - 37.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 24.2°C - 24.9°C வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம்மணிக்கு 13 - 16 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் காய்கறி மற்றும் பழ மரங்கள் பூக்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் எதிர்பார்க்கும் மழையைப் பயன்படுத்தி மேலுரம் இட்டு மண் அணைக்க திட்டமிடலாம்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| எதிர்பார்க்கப்படும் மழை பயன்படுத்தி பயிர் விதைத்துள்ள விவசாயிகள் பாடுவாசி உள்ள இடங்களில் மறு விதைப்பு செய்யவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மக்காச்சோளம் | கடந்த வாரம் பெய்த மழை மற்றும் தொடர்ந்து பருவமழை தேவையான மழை அளவு தக்கதருணத்தில் எதிர்பார்க்கப்டுவதால் புரட்டாசிப்பட்டம் மானாவாரி மக்காச்சோளம் விவதைக்க நிலம் தயார்படுத்துதல். ஒரு எக்டருக்கு 12.5 டன் தொழு உரம் அல்லது மக்கியதொழு உரம் அல்லது மக்கிய தேங்காய் நாரைச் சமமாகக் கடைசி உழவிற்கு முன் சீராக இட்டு, அதனுடன் 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம் கலந்து பரப்பி நன்கு உழவு செய்யவும். நல்ல தரமுடைய விதைகளை தேர்ந்தெடுக்கவும். வீரிய ஒட்டு இரகங்களுக்கு 20 கிலோ, எக்டர் என்ற அளவிலும் இரகங்களுக்கு 25 கிலோ, எக்டர் என்ற அளவிலும் பின்பற்றவும். |
| உளுந்து | தற்போது நிலவும் பருவ சூழ்நிலையில் புரட்டாசி பட்டத்தில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் கொடுக்கக்கூடிய உளுந்து ராகம் வம்பன் 8 மற்றும் வம்பன் 10, பச்சை பயிறு வம்பன் 3 மற்றும் 4 ஆகிய ரகங்கள் இரங்களை தேர்வு செய்து விதைக்கவும் விதைக்கும் முன் உளுந்தில் வேர் அழுகல் நோய் வராமல் தடுக்க விதையை டிரைகோடெர்மா விரிடி 4 கிராம்/கிலோ (அ) சூடோமோனாஸ் 10 கிராம்/கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னையில் காண்டாமிருக வண்டினை வேப்பங்கொட்டை தூள்ளையும், மணலையும் 1:2 என்கிற விகிதத்தில் கலந்து மரம் ஒன்றுக்கு 150 கிராம் விகிதம் நாடு குருத்தின் 3 வது மட்டை இடுக்கில் வைக்கவும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக்கன் | வடகிழக்கு பருவமழை காலங்களில் கோழி வளர்க்கும் விவசாயிகள் இரத்த கழிச்சல் நோய் ஏற்படாமல் தடுக்க ஆழ்கூளம் சுத்தமாகவும், ஈரப்பதம் இல்லாமாலும் சுத்தமான குடிநீர் கோழிகளுக்கு கிடைக்குமாறு செய்ய வேண்டும். |